CCE-III-RR/PR/PF/NSR/NSPR(A)/111/7137

**A**

**ಆಗಸ್ಟ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ-3**

**AUGUST 2024 EXAMINATION-3**

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]
Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 38 ]
Total No. of Questions : 38 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 85-T**
**Code No. : 85-T**

**CCE RR/PR/PF/ NSR/NSPR**
**FULL SYLLABUS**

Question Paper Serial No.

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE (சமூக அறிவியல்)

**(ತಮಿಳು ಮಾಧ್ಯಮ / Tamil Medium)**

**(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Regular Repeater / Private Repeater / Private Fresh / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : 06. 08. 2024 ] [ Date : 06. 08. 2024

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-15 A.M. to 1-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

**பொதுவான குறிப்புகள் :**

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 38-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது ( Sealed by reverse jacket ) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது**. வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் ( Admission Ticket ) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**06. 08. 2024**

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I. பின்வரும் வினாக்கள்/மற்றும் முழுமைப்பெறாத கூற்றுகளுக்கு *நான்கு* மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும் :**

**8 × 1 = 8**

1. இரு அரசுகள் சட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்த மையம்

   (A) 1773 ன் ஒழுங்குமுறை சட்டம்

   (B) 1909 ன் இந்திய கவுன்சில் சட்டம்

   (C) 1919 ன் இந்திய அரசு சட்டம்

   (D) 1935 ன் இந்திய அரசு சட்டம்

2. கீழ்காண்பவற்றில் ஒன்று குழுவில் சேராதது

   (A) அச்சு

   (B) முக்கூட்டு நட்புறவு குழு

   (C) முக்கூட்டு உடன்படிக்கை

   (D) பழுப்பு நிற சட்டைகள்

3. ஐ.நா. சபையின் தலைமையகம் இங்கு அமைந்துள்ளது

(A) பாரிஸ்

(B) வாஷிங்டன் D.C

(C) நியூயார்க்

(D) ரோம்

4. சுயஉதவிக் குழுக்களை நிறுவுவதின் நோக்கம்

(A) நகர்ப்புற வளர்ச்சி

(B) பெண்களுக்கு அதிகாரமளித்தல்

(C) தொழில்மயமாக்கல்

(D) வெளிநாட்டு வணிகத்தை ஊக்குவித்தல்

5. இந்தியாவின் உயர்ந்த பல்நோக்கு நதி பள்ளதாக்கு திட்டம் இதுவாகும்

(A) பக்ரா-நங்கல் திட்டம்

(B) கோசி திட்டம்

(C) தாமோதர் நதி பள்ளத்தாக்கு திட்டம்

(D) துங்கபத்ரா திட்டம்

6. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மைகாவின் அளவு குறைந்துள்ளதின் காரணம்

(A) மைகா சுரங்கங்கள் தீர்ந்துவிட்டன

(B) சீனா மைகாவை அதிகளவில் உற்பத்தி செய்கின்றன

(C) மைகாவிற்கு மாற்றுப் பொருள்கள் கிடைக்கின்றன

(D) மைகாவின் விலை அதிகரித்தல்

7. இந்தியாவின் பசுமை புரட்சியின் தந்தை

(A) வர்கீஸ் குரியன்

(B) டாக்டர் நார்மன் போர்லாங்

(C) ஹாஜி கலிமுல்லா கான்

(D) டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன்

8. கிரிஷ் மாநில ஆணையத்திடம் பொருள் வாங்குவதில் ஏமாற்றப்பட்டதாக புகார் அளித்தான். அவரது கோரிக்கையின் மதிப்பு இவ்வாறாக இருக்க வேண்டும் ?

(A) ஒரு கோடிக்கு மேல்

(B) இருபது லட்சம் முதல் ஒரு கோடி வரை

(C) பத்து லட்சத்திற்கு குறைவானது

(D) பத்து லட்சம் முதல் இருபது லட்சம் வரை

**II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும் :**

**$8 \times 1 = 8$**

9. முதல் ஆங்கிலேய-மராட்டிய போர் முடிவில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் எது ?

10. 1953 இல் பசல் அலி தலைமையில் ஆணையம் ஏன் உருவாக்கப்பட்டது ?

11. படைக்குறைப்பு என்றால் என்ன ?

12. அமைதிப் பள்ளத்தாக்கு திட்டம் ஏன் தொடங்கப்பட்டது ?

13. "2009 இன் கல்வி உரிமைச் சட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டது. ஏன் ?

14. தீவிர வேளாண்மையின் பயன்பாடு என்ன ?

15. இந்தியாவில் நிதியாண்டு கால அளவு என்ன ?

16. "தொழில்முனைவு திறன் என்பது ஒரு துணிகரமான நடைமுறை செயல்" எப்படி ?

**III. <u>பின்வரும் வினாக்களுக்கு இரண்டிலிருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளிக்கவும் :</u>** **8 × 2 = 16**

17. தீவிரவாதத்தை கட்டுப்படுத்த இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகளை பட்டியலிடுக.

**அல்லது**

ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் பெயர்களை குறிப்பிடவும்.

18. நாம் வேலையில்லா திண்டாட்டத்தினை எவ்வாறு தீர்க்கலாம் ?

**அல்லது**

சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு வரதட்சணை என்ற தீமையை நாம் எவ்வாறு ஒழிக்கலாம் ?

19. ஆங்கிலேயர்களுக்கு தங்கள் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்த துணைப்படைத் திட்டம் எவ்வாறு உதவியாக இருந்தது ?

20. சுதந்திரத்திற்கு பிறகு இந்தியா எதிர்க் கொண்ட சிக்கல்கள் யாவை ?

21. இந்தியாவின் தட்பவெப்பநிலை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணிகள் யாவை ?

22. மண் அரிப்பு வேளாண்மை உற்பத்தியை பெருமளவில் எவ்வாறு பாதிக்கின்றது ?

23. ஐந்தாண்டு திட்டங்களின் நோக்கங்களை விவரி.

24. தொழில் முனைவோர் ஊக்குவிப்பு நிறுவனங்களை நிறுவுவதன் நோக்கங்கள் யாவை ?

**IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடையளிக்கவும் :**
**9 × 3 = 27**

25. சிக்கதேவராஜ உடையாரின் சாதனைகளை பட்டியலிடுங்கள்.

**அல்லது**

டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் பரிந்துரைத்த சீர்திருத்தங்கள் யாவை ?

26. தூரபுலனுணர்வு தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை விளக்கவும்.

**அல்லது**

தொழிற்சாலைகளின் இடஅமைப்பைை பாதிக்கும் காரணிகளை பற்றி விளக்குக.

27. இந்தியாவை அதிகார மடையச் செய்வதற்கு அதன் கிராமப்புற வளர்ச்சி அவசியம். ஏன் ?

**அல்லது**

பொது நிதி என்பது நிதி ஸ்திரத்தன்மையை நிலைநாட்டகூடிய ஒரு முக்கிய கருவியாகும். எப்படி ?

28. அனைவரின் வாழ்விலும் வங்கிச் செயல்பாடுகள் மிகவும் இன்றியமையாதவை. ஏன் ? நியாப்படுத்துக.

**அல்லது**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, நுகர்வோரைப் பாதுகாக்கிறது. எப்படி ?

29. மார்த்தாண்ட வர்மா டச்சுக்காரர்களின் அதிகாரத்திற்கு எதிரான போராட்டத்தை எவ்வாறு ஒழுங்கு செய்தார் என்பதை விளக்குக.

30. இரண்டாம் உலகப் போரில் சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புகளில் என்ன மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன ?

31. ரஷ்யா மற்றும் இந்தியாவின் இடையேயுள்ள உறவை விளக்குக.

32. தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகள் யாவை ?

33. வங்கக் கடலில் நேற்று இரவு கடுமையான காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டது. தமிழக அரசு அதற்கு எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் ?

**V. <u>பின்வரும் வினாக்களுக்கு எட்டு வாக்கியங்களில் விடையளிக்கவும் :</u>**

**4 × 4 = 16**

34. ஆங்கிலேயர் காலத்தில் காவல் துறையில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களை பற்றி விளக்குக.

*அல்லது*

முதல் இந்திய சுதந்திரப் போரின் தோல்விக்கான காரணங்களை விளக்குக.

35. இந்தியர்களிடையே தேசியவாத இயக்கத்தை தூண்டுவதில் பாலகங்காதர திலகர் முக்கிய பங்கு வகித்தார். நியாயப்படுத்துக.

36. சமீப காலமாக பெண்களின் நிலை மேம்பட்டு வருகிறது. நியாயப்படுத்தவும்.

37. காடுகளை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம் ?

**VI.** 38. **இந்திய தரைப் ( Outline ) படத்தை வரைந்து கீழ்க்காண்பவற்றைக் குறிக்கவும்.** **1 + 4 = 5**

a) கடக ரேகை

b) ஹிராகுட் திட்டம்

c) இந்தியாவின் நுழைவுவாயில்

d) கோலார்

*பார்வைத் திறன் அற்றோர்க்கான வினா :* **(வினா எண் 38 க்கான மாற்று வினா)** **5**

பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டத்தின் முக்கிய நோக்கங்களை குறிப்பிடுக.

DO NOT WRITE ANYTHING HERE